**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 209/2022 தேதி: 02.12.2025**

**வா.சா. 1 – ராஜேந்திரன்**

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் எனது நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். நான் இந்த வழக்கில் 1 ம் வாதி. வழக்கின் 2ம் வாதி எனது உடன் பிறந்த சகோதரர். இவ்வழக்கு பற்றிய விபரங்கள் எனக்கு நன்றாக தெரியும். வழக்கின் 16 வது பிரதிவாதி எனது உடன் பிறந்த சகோதரி. 16ம் பிரதிவாதிக்கு எங்களது பூர்விக வேறு சொத்தில் வாய்மொழியாக பாகம் கொடுத்துவிட்டோம். அதனால் 1 லக்க சொத்தில் அவர் பங்கு கோரவில்லை. பிராது சொத்துக்கள் எங்களது பூர்விக சொத்துக்கள். பிராது சொத்து 60 செண்ட். எனது தந்தையும், 1ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதிக்கு கணவரும், 3, 4 பிரதிவாதிகளுக்கு தகப்பனாருமான அழகரும் உடன் பிறந்த சகோதரர்கள் . 1990 ம் வருடம் எனது தகப்பனாரும், 1ம் பிரதிவாதியும், அழகரும் வாய்மொழியாக பிராது சொத்தை பொறுத்து வாய்மொழியாக பேசி பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பேசும் போது தலா 20 செண்ட் வீதம் பிரித்துக்கொள்ள ஒத்துக்கொள்ளப்பட்டது.

தென்வடலாக பிரிக்கும் போது வடக்கு பக்கம் கணபதி அவர்களுக்கும், மைய பகுதி கோபால் அவர்களுக்கும், தெற்கு பக்கம் அழகர் அவர்களுக்கும் பிரிக்கப்பட்டது. இதில் மூத்தவர் கணபதி என்பதால் அவர் பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். பிராது 3 வது இலக்க

சொத்தில் கோபாலுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் கோபாலும், அழகருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் அவரது வாரிசுகளும் விவசாயம் செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். 27.03.1995 ம் தேதி நானும், எனது தகப்பனாரும் சேர்ந்து 8 ம் பிரதிவாதிக்கு எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட 20 செண்ட் இடத்தில் மேற்கு பகுதியில் 5 செண்ட் இடத்தை 8ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணம் வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 8ல் எனது சகோதரர் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் வாதிக்குரிய 10 செண்டை விட்டு விட்டு எனக்குரிய 10 செண்டில் 5 செண்ட் இடத்தை நான் கிரையம் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரையத்தில் எனது சகோதரர் பாகம் இல்லாததால் அவர் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான்.

8ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த வா.சா.ஆ 8 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தின் நான்குமாலில் கோபால் சேர்வை பாக புஞ்சைக்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 20.06.2014 ம் தேதி எனது தகப்பனார் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். எனது தந்தையின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ 6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த பின்பு எனக்குரிய எஞ்சிய 5 செண்ட் நிலமானது எனது அனுபவத்திலும், கிழக்கு பக்கத்தில் உள்ள 10 செண்ட் 2ம் வாதியின் அனுபவத்திலும் இன்றைய தேதி வரை உள்ளது என்றால் சரிதான். 8 ம் பிரதிவாதி 9 ம் பிரதிவாதிக்கு 26.07.2018 ம் தேதியில் 5 செண்ட் நிலத்தை கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்தில் அதற்கு முந்தைய ஆவணமான 174/1995 ல் கண்ட நான்குமால் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது வா.சா.ஆ 9 ஆக

குறியீடு செய்யப்பட்டுள்ளது. 9 ம் பிரதிவாதி, 10 பிரதிவாதிக்கு அதே 5 சென்டை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அது வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ 10 ஆவணத்தில் நான்கு மால் தவறாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் தான் மேற்படி சொத்தை 2 வது இலக்க சொத்தாக காண்பிக்கப்பட்டு கிரையம் செல்லாது என்று பரிகாரம் கோரியுள்ளேன்.

பிராது 2 லக்க சொத்திற்கும், இவ்வழக்கில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பிராது 3 வது லக்க சொத்திற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ 10 ஆவணத்தில் தெற்கில் கோபால் சேர்வை பாக புஞ்சை என்பதற்கு பதில் கணபதி சேர்வை பாக புஞ்சை, ராஜேந்திரன் பாக புஞ்சை என்று தவறாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் 5, 6, 7 பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்துக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றால் சரிதான். இவ்வழக்கில் 5, 6, 7 பிரதிவாதிகள் 12, 13 பிரதிவாதிகளிடம் பட்டா ரத்து செய்ய மனு கொடுத்து அந்த விசாரணையில் நான் மட்டும் ஆஜராகி எதிர் வாதம் செய்தேன் என்றால் சரிதான். 12, 13 பிரதிவாதிகளிடம் நடைபெற்ற விசாரணையில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எந்தவித அறிவிப்பும் அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். ஆகையால் 1 முதல் 4 பிரதிவாதிகள் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றால் சரிதான். பிராது 3 லக்க சொத்து 1 ம் பிரதிவாதிக்கும், அழகருக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அதில் எனக்கு பாகம் இல்லை என்று சொன்னால் சரிதான். அதனால் தான் 1 வது இலக்க சொத்தை பொறுத்து மட்டும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால்

சரிதான். 12, 13 பிரதிவாதிகளின் விசாரணையில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பச் சொல்லியும் அவர்கள் அறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பாமல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ஒருதலைபட்சமானது என்றால் சரிதான். பிராது 3 லக்க சொத்தில் எனக்கு எந்தவித பாகமும் கிடையாது என்றால் சரிதான். 5, 6 பிரதிவாதிகள் பட்டாவை ரத்து செய்யகோரிய விசாரணையில் 8, 9, 10 பிரதிவாதிகளுக்கு 12, 13 பிரதிவாதிகளால் அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றால் சரிதான்.

**8, 9, 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

பிராது சொத்துக்கள் அனைத்தும் எங்களது பூர்விக சொத்துக்கள் என்றால் சரிதான். பூர்விக சொத்து மொத்தம் 60 செண்ட். பூர்விக சொத்துக்கள் முழுவதும் எனது தந்தை கணபதி பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். மேற்படி 60 செண்டில் எனது தந்தை மற்றும் அவரது சகோதரர்கள் ஆளுக்கு 20 செண்ட் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். எனது தந்தை கணபதிக்கு சொந்தமான 20 செண்டில் தான் 5 செண்டை 27.03.1995 ம் ஆண்டு 8ம் பிரதிவாதிக்கு நானும், எனது தந்தையும் சேர்ந்து கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். 8ம் பிரதிவாதிக்கு பதிவு செய்து கொடுத்த 5 செண்ட் நிலமானது மொத்த 20 செண்ட் இடத்தில் வடமேற்கு திசையில் உள்ளது என்றால் சரிதான். நானும், எனது தந்தையும், 8ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த 5 செண்டு நிலத்திற்கு நான்குமால் எங்கள் பாகத்திற்கு மேற்கு, கோபால் சேர்வை பாக புஞ்சைக்கு வடக்கு, கணேசன் சேர்வை புஞ்சைக்கு கிழக்கு, ரோட்டிற்கும் தெற்கு என்று பிராதில் கண்டுள்ளது என்றால் சரிதான்.

8 ம் பிரதிவாதி, 9 ம் பிரதிவாதிக்கு மேற்படி 5 செண்ட் நிலத்தை கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 9 ம் பிரதிவாதி, 10 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 9 ம் பிரதிவாதி, 10 பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் நான்கு மால் தவறாக உள்ளதால் தான் இவ்வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிராதில் 2 வது லக்க சொத்தில் நான்குமாலில் தெற்கு பக்கம் கணபதி சேர்வை, ராஜேந்திரன் பாக புஞ்சை என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நானும், எனது தந்தையும் எழுதிக்கொடுத்த 5 செண்ட் நிலத்தில் வடபுறம் ரோடு, கிழக்கு பக்கம் கணபதி சேர்வை பாக புஞ்சை, மேற்கே சமையன் என்பவரின் பாக புஞ்சை உள்ளது என்றால் சரிதான். தெற்கு பக்கம் கணபதி பாக புஞ்சை உள்ளது என்றால் சரியல்ல. தெற்கு பக்கம் கோபால் பாக புஞ்சை உள்ளது. கிழக்கு பக்கமும், தெற்கு பக்கமும் கணபதி சேர்வை பாக புஞ்சை தான் உள்ளது என்றும், நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9 ம் பிரதிவாதி, 10 பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திர ஆவணத்தில் தெற்கு பக்கம் கணபதி சேர்வை, ராஜேந்திரன் என்று நான்குமாலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 16.06.2023 ம் தேதி 9 ம் பிரதிவாதி, 10 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் நான்குமாலில் பிழை சீர்திருத்த பத்திரம் தாக்கல் செய்து மேற்படி நான்குமாலில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தெற்கு புறம் கோபால் சேர்வை பாக புஞ்சை என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். நானும், எனது தந்தையும் 8 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திர நான்குமாலில் தெற்கு பக்கம் கோபால் சேர்வை பாக புஞ்சை

என்று தவறுதலாக நாங்கள் தான் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரியல்ல. 9ம் பிரதிவாதி, 10 பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் நான்கு மால் சரியாக தான் உள்ளது என்றும், நான் வழக்கிற்காக தவறுதலாக உள்ளது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

( 5, 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.